www.padippakam.com




# தொழிலாளர் பாதை

★ வார இதழ் ★ இதழ் 374 ★ 1987 அக் 23 வெள்ளிக்கிழமை ★ விலை 1–50 சதம்


# இந்திய இராணுவத் தாக்குதல் இரத்த களரியை சிருஷ்டிக்கிறது

## தமிழ் இனத்திற்கு பாதுகாப்பு வழங்க தொழிலாள வர்க்கம் முன்வர வேண்டும்!

**தமிழ் தேசிய இனத்தினை ஒடுக்கித் தள்ளி இரத்தக் களரி தாக்குதலினை நடாத்தி வரும் இந்திய இராணுவம், அக்டோபர் 15 ல் யாழ்ப்பாண நகரினுள் அடைப்பட்டுக் கிடக்கும் 1 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான பொது மக்களையும், தமிழ் ஈழம் விடுதலைப் புலிகள் இயகத்தின் கெரில்லாக்களையும் இரதத வெள்ளத்தில் மூழ்கடிக்க முயன்று வருகின்றது.**

தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை சிதறடிக்க இந்திய — இலங்கை முதலாளிகள் நடாத்தி வரும் கொலைகார ரத் தாக்குதலைத் தோற்கடிக்கவும் தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளின் பேரிலும் முன்வர வேண்டும் என இலங்கை — இந்திய தொழிலாள வர்க்கங்களை நாம் வேண்டுகின்றோம்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக அப்பட்டமாக யுத்தப் பிரகடனம் செய்த அக்டோபர் 8 ம் திகதியில் இருந்து எதிர்ப்புரட்சி காந்தி அரசாங்கத்தின் இராணுவம், இலங்கையின் பலவீனமான எதிர்ப்புரட்சி முதலாளிகளால் செய்ய முடியாத மிலேச்ச யுத்த அழிவினை வடக்கு — கிழக்கு மாகாணத்தில் — சிறப்பாக தமிழர் எதிர்ப்பின் மத்திய நிலையமான யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று அமுல் செய்து வருகின்றது.

காங்கிரஸ் அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சர் கே. சீ. பந்தும் இராணுவத் தளபதி கே. சுந்தர் ஜீயும் இலங்கைக்கு விஜயம் செய்து அங்கீசரித்த திட்டத்துக்கு இணங்க அக்டோபர் 8 ம் திகதி. இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் தாக்குதல் ஆரம்பமாகியது. குடா நாட்டினை தரை, கடல், ஆகாய மார்க்கமாக சுற்றி வளைத்து 'சீல்' வைத்து இந்திப் படைகள், எந்த ஒரு பத்திரிகை நிருபரைத் தன்னும் நுழைய விடாது தடுதது இந்தக் களரியை தொடங்கியது.

இந்திய ஆக்கிரமிப்பாளன் யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு உணவு, எரிபொருள், மருந்துகள் விநியோகம் இடம் பெறுவதை காட்டுமிராண்டித் தனமான முறையில் தடை செய்து உள்ளான். அத்தோடு யாழ் நகரில் மின்சாரம், தண்ணீர் விநியோகம் இப்படைகளால் சீர்குலைக்கப்பட்டு உள்ளது. அக்டோபர் 13 ம் திகதி செவ்வாக்கிழமை இந்தியப் படைகளின் 'ஷெல்' வெடித் தாக்குதலால் யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரி ஸ்தம்பிக்கச் செய்யப்பட்டது. இத்தாக்குதலைத் தொடர்ந்து நோயாளியளும், ஊழியர்களும் அனுதைகளாக ஓட்டிக் கலைக்கப் பட்டனர். அக்டோபர் 16 ம் திகதி தெல்லிப்பழை ஆஸ்பத்திரி நாசம் ஆக்கப்பட்டு உள்ளது.

யுத்த டாங்கிகள், கனரக இராணுவ வாகனங்கள், 'ஷெல்' வெடிகள், ரொக்கட் மூலம் ஏவும் கிரனேட்டுகள், ஹெலிகொப்டர்கள், தன்னியக்க இயந்திரத் துப்பாக்கிகள் முதலானவற்றைப் பாவித்த வண்ணம் 15,000 — 20,000 ஆக்கிரமிப்புப் படையினர் ஆயிரக் கணக்கான மக்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் நாசம் விளைவித்து உள்ளனர். இத்துடன்

(2 ம் பக்கம் பார்க்கவும்)

## டொம் கெனகன் கொலையின் பத்தாண்டு நினைவஞ்சலி 1987



அக்டோபர் 16 ம் திகதி தோழர் டொம் கெனகனின் கொலையின் பத்தாண்டு நினைவஞ்சலி இடம் பெறுகின்றது.

டொம் கெனகன் அமெரிக்காவின் ஒரே ஒரு புரட்சிக் கட்சியான தொழிலாளர் கழகத்தினதும் அதன் இளைஞர் அமைப்பான இளம் சோசலிஸ்டுகளதும் முக்கிய தலைவராக விளங்கினர். நியூயோர்க் நகர புரூக்கிளின் பிரதேச புஷ்விக்கில் நடந்த இளம் சோசலிஸ்ட் நடனம் ஒன்றை மேற் பார்வையிட்டுக் கொண்டு இருந்த சமயத்தில் 1977 அக்டோபர் 16 ம் திகதி சுடப்பட்டு கொலையுண்டார். அப்போது அவரது வயது 26 ஆகும்.

அவர் அரசியல் கொலை ஒன்றிற்கு இலக்கானர். அவரை கொலை செய்ய பாவிக்கப்பட்ட துப்பாக்கி குண்டு முழுத் தொழிலாள வர்க்கத்திற்கும் இளைஞர்களுக்கும் எதிராக ஏவப்பட்டது ஆகும். அவரைக் கொலை செய்ய கொலைஞர்களை அனுப்பியவர்கள் தொழிலாள வர்க்கத்தினுள் புரட்சிகர தலைமைத்துவம் கட்டி எழுப்பப்பட்டு முதலாளித்துவ அமைப்பு தூக்கி எறியப்பட்டு சோசலிசம் உருவாகுவதை தடுப்பதை எதிர்ப்பார்த்தே இதனை செய்தனர். அடுத்த இதழில் இது குறித்த கட்டுரை பிரசுரமாகும்.

**வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று!**

படிப்பகம்

www.padippakam.com



18

# இந்திய இராணுவ தாக்குதல் . . .

## [முன் பக்கத் தொடர்ச்சி]

-சுமார் 4 லட்சம் மக்கள் தமது வசிப்பிடங்களில் இருந்து வெளியேறும் படி இந்தியப் படைகளால் உத்தர விடப்பட்டு உள்ளனர்; இவர்களுக்கு உணவு, தண்ணீர் மருந்து, எரிபொருள் எதுவுமே கிடையாது.

இந்திய — இலங்கை கோபெல்சுகளும் அவர்களின் சீடர்களான ஸ்டாலினிச (கம்யூனிஸ்ட் கட்சி) பொய்யர்களும் கொலை செய்யப்பட்ட தனி நபர்களின் பொய்கள் மூலம் அழிவின் விஸ்தீரணத்தைக் குறைத்துக் காட்ட தலை கீழாக நின்று வருகின்றார்கள்.

இந்திய இரத்த வெறி முதலாளித்துவ ஆட்சியாளர்கள் கிழக்குப் பாகிஸ்தானில் முக்திபாஹினி கெரில்லா படைகளை நாசம் ஆக்கிய சமயத்தில் மட்டும் அன்றி இந்தியாவுக்கு உள்ளேயே ஒடுக்கப்படும் மக்களை இரத்தத்தால் மூழ்கடிக்கும் மிலேச்ச யுத்தத்துக்கு தயார் செய்யப்பட்ட இராணுவத்தின் கொலைகார அனுபவங்களைக் கொண்டு உள்ளது. இவற்றை இன்று வடக்கு — கிழக்கில் இராணுவ ஒடுக்கு முறையாக கட்டவிழ்த்து விட்டு உள்ளது.

'யுத்தத்தினை நிறுத்தி' 'சமாதானப்' பேச்சுவார்த்தைகளுக்கு தயார் என தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் அனுப்பிய கடிதம் பற்றி ஜே. என். டிக்சித் (அக்டோபர் 16) குறிப்பிடுகையில் ''யுத்த நிறுத்தம் பற்றிய பிரச்சினை தோன்ற வில்லை'' என்று உள்ளார். சுதந்திரப் போராட்டத்தினை நிறுத்தி விட்டு, காந்தி — ஜயவர்தன அரசாங்கங்களின் ஆளுமைக்கு கேவலமான முறையில் அடி பணிந்து ஆயுதங்களை ஒப்படைக்க தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைவர். வே. பிரபாகரன் அறிக்கை வெளியிடாத வரையில் யுத்த நிறுத்தம் கிடையாது என டில்லி அரசாங்கம் மிரட்டியது. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் சென்னை செய்தி பரிவர்தனை நிலையம் அழிக்கப்பட்டமை, பிற்போக்கு ஆட்சியாளர்களிடம் எந்தவிதமான சமாதானமும் கிட்டாது என்பதை காட்டவே இடம் பெற்றது. அத்தோடு அக்டோபர் 16 வெள்ளிக்கிழமை த. வி. புலிகளின் தலைவர்களான கிட்டுவும், ரஹீமும் கைது செய்யப்பட்டனர்.

சமசமாஜ — கம்யூனிச — இ. தொ. கா துரோகத் தலைவர்கள் இந்த எதிர்ப்புரட்சி ஆக்கிரமிப்பை 'உடனடியாக' அமுல் செய்யும் படி கேட்டதோடு, இலங்கையில் தமது எஜமானை காக்க, புதிதாக கிடைத்த இந்திய எஜமான் தீர்க்கும் ஒவ்வொரு வேட்டுக்கும் தமது எதிர்ப் புரட்சி மகிழ்ச்சியை வெட்கம் மானம் இன்றி 'அத்த' முதலாளித்துவ பத்திரிகைகள் மூலம் வெளிப் படுத்தியும் வருகின்றனர். இத்துரோகிகளதும் இந்திய ஸ்டாலினிச துரோகிகளதும் கடைகெட்ட காட்டிக் கொடுப்பும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் தமிழ் நாட்டு, டில்லி ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கை கொண்டு நடாத்தி வந்த அரசியல் நடவடிக்கைகளுமே இன்றைய ஆக்கிரமிப்புக்கு வழி வகுத்தது.

ஈ. பி. ஆர். எல். எப்., புளொட், ரெலோ, ஈ. என். டி. எல். எப். இயக்கங்களின் கோழைத் தலைவர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி பிற்போக்கு முதலாளித்துவத் தலைவர்களும் இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தின் மத்தியில் காந்தி — ஜயவர்தன உடன் படிக்கைக்கு முழுமனே அடி பணியாமைக்கான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் குறை கூறும் காந்தி — ஜயவர்தன எஜன்டுகளாக வெளிப்பட்டு உள்ளார்.

வடக்கு — கிழக்கில் இருந்து கிடைக்கக் கூடியதாக உள்ள அறிக்கைகளின் படியும், இலங்கை — இந்திய கோபெல்சுகளின் அறிக்கைகளில் குறிப்பிடப்படும் சில விடயங்களின் படியும், இலட்சக் கணக்கான மக்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்க கெரில்லாக்கள் இந்திய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நடாத்தும் யுத்தத்தில் நேரடியாக பங்கு கொண்டு உள்ளது தெரிகின்றது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் 'மனித கேடயங்களை' பயன் படுத்துவதாக இலங்கை இராணுவ தளபதிகள் தமது ஆக்கிரமிப்பின் மத்தியில் கூறிய அதே கதைகளையே இந்திய ஆக்கிரமிப்பாளர்களும் புனருத்தாரனம் செய்ய நேரிட்டு உள்ளது. இந்திய அறிக்கைகளின் படி இந்திய படையினர் 79 மரணம் அடைந்தும் 223 பேர் காயம் அடைந்தும் உள்ளதோடு 15 பேர் காணமலும் போயுள்ளனர்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இந்த மக்கள் ஆதரவின் மத்தியிலேயே இந்திய ஆக்கிரமிப்பாளருக்கு முகம் கொடுத்து வருகின்ற போதிலும் அவர்கள் இந்திய — இலங்கை முதலாளிகளுடன் சமரசமற்ற ஒரு போராட்டத்திற்கு தயார் இல்லை. இதனாலேயே இந்த மக்கள் பலம் ஸ்தம்பிதம் அடைந்து போயுள்ளது இந்திய முதலாளி வர்க்கம், இலங்கை முதலாளி வர்க்கத்திலும் பார்க்க 'நல்ல' 'ஜனநாயக' சக்தியாகும்' என்பன போன்ற நப்பாசைகளை இவர்கள் தாவினர். இவர்கள் தமக்கு ஆதரவு தராது போகினும் குறைந்த பட்சம் நடுநிலை வகிக்கும் எனவும், நேரடித் தாக்குதலில் இறங்காது எனவும் நம்பினர்.

இந்திய இராணுவம், ஜயவர்தனவின் முழுப் பக்கபலத்துடனும் வடக்கு — கிழக்கில் குதித்ததுமே அதனை ஆக்கிரமிப்பு இராணுவமாகப் பெயர் சூட்ட விடுதலைப் புலிகள் மறுத்தள. இந்திய — இலங்கை முதலாளி வர்க்கங்களின் கூட்டுத் தாக்குதலை எதிர்த்து இந்தியத் துணைக் கண்டத்தின் தொழிலாளர் — விவசாயிகளை அணி திரட்டும் பாதையில் பயணம் செய்ய அவர்களின் தேசியவாதம் குறுக்கிடாகியது. ஏகாதிபத்தியத்தின் முழு ஆதரவுடன் நுழைந்த இந்திய இராணுவத்தை, இலங்கை இராணுவத்திற்கு எதிராகப் 'பயன்படுத்த முடியும், என்ற நப்பாசைகளை இவர்கள் வளர்த்தனர். தமிழ் தேசிய இனத்தின் 'பாதுகாப்புக்கான' நடவடிக்கைகளை எடுக்கும் படி இவர்கள் இன்று ஆயிரமாயிரம் தமிழ் மக்களை துடிக்க துடிக்க பலியெடுத்த வண்ணம் இரத்த வெறி கொண்டு அலையும் இந்திய இராணுவத்திடம் வேண்டினர்!

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் சின்னாபின்னமாக்கும் பொருட்டு இரண்டு மாதங்களுள் இந்தியப் படைகளும் இலங்கை அரசின் ஆத்திர மூட்டும் ஏஜன்டுகளும், சிங்கள — தமிழ் — ஹிந்து — முஸ்லீம் மோதுதல்களுக்கு எண்ணெய் வார்க்கையில் தாம் இந்த இரு முதலாளித்துவ அரசுகளுக்கும் எதிராக தமிழ் சிங்கள தேசிய இனங்களதும், அனைத்து மதக் குழுக்களதும் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் காக்கும் ஆட்சி முறைக்காக போராடி வருவதாகக் கூற த. ஈ. வி. புலிகள் தவறிவிட்டன.

தமிழ் தேசிய இனத்தினது விடுதலைக்கு மட்டும் அர்ப்பணித்துக் கொண்டு உள்ள ஒரு இயக்கமாக விடுதலைப் புலிகள் தோன்ற முயல்வது இந்திய துணைக் கண்டத்தில் உள்ள மாபெரும் தொழிலாள வர்க்கத்தில் இருந்து தமிழ் மக்களை பிரித்து வைப்பதுடன் மட்டும் அன்றி, செப்டம்பரில் கிழக்கு மாகாணத்தில் உண்டு பண்ணிய வகையிலான மிலேச்ச மோதுதல்களை நிர்மாணிக்க இந்திய — இலங்கை இராணுவங்களுக்கு இடமும் அளித்தது.

இலங்கையினுள் தமிழ் தேசிய இனம் நீண்ட காலமாக பிரமாண்டமான தேசிய ஒடுக்கு முறைக்கு பலியாகி வந்தது உண்மை. போர்த்துகேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களால் நசுக்கப்பட்ட இந்த தேசிய இனம் பின்னர், சிங்கள முதலாளிகளின் மிலேச்ச அடக்கு முறைக்கும் ஒடுக்கு முறைக்கும் ஆளாகியது.

எனினும் தேசிய சிறப்பு குணம்சங்களின் அடிப்படையில் தமது உரிமைகளை மட்டும் அடையும் இயக்கத்தை கட்டி எழுப்புவதன் மூலம் தேசிய விடுதலையை அடைய முடியாது. நாம் வாழ்ந்து கொண்டு உள்ள இன்றைய சகாப்தத்தில் அத்தகைய ஒரு இயக்கம் எவ்வளவு தான் பொதுஜன ஆதரவை திரட்டிக் கொள்ளினும் அது எதிரி முதலாளி வர்க்க அரசுகளின் பலத்தின் முன்னால் ஈடாட்டம் காண்கின்றது. சிறப்பான ஒடுக்கப்படும் தேசிய இனத்தில் விடுதலை இயக்கமானது ஜனநாயகத்தை பரந்த அளவிலும் போராடும் இயக்கத்தின் ஒரு பாகமாக மட்டுமே முன் செல்ல முடியும். தேசிய சிறப்பியல் புவாதம், ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் அத்தகைய ஒரு இயக்கத்தின் பாகமாகுவதை தடை செய்கிறது.

இதற்கு காரணம் தேசிய சிறப்பியல்புவாதம், இறுதி ஆய்வுகளின் படி, தேசிய முதலாளிகள் தமது நாட்டினது தொழிலாளர்களை சுரண்டவும், விவசாயிகளை கசக்கி பிழியவும் செய்யும் முயற்சிகளுடன் இணைந்து கொண்டு உள்ளதே. தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பலவீனம் அதில் இருந்தே ஊற்றெடுக்கின்றது.

படுகொலை தாக்குதலுக்கு இந்தியப் படைகள் யாழ்ப்பாண நகரை முற்றுகையிடும் வேளையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அக்டோபர் 14 ல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு பின்வருமாறு எழுதினார்;

''... எமது மக்களில் போதிய அளவினரை திரட்டிக் கொள்ளும் திட்டத்தின் கீழ் தற்காலிக அரசாங்கம் அமைக்கப்படுமிடத்து எஞ்சிய ஆயுதங்களை ஒப்படைக்க நாம் உடன்படுகின்றோம். கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற கலகங்களை கொண்டு மட்டும் எமது அரசியல் இயக்கத்துக்கு எதிராக கவலைக்கிடமான முறையில் இராணுவ நடவடிக்கை எடுக்க இந்திய அரசாங்கம் தீர்மானிப்பது துரதிஷ்டவசமானது. அவை எம்மால் திட்டமிடப்பட்டவை அன்று. எவ்வாறு எனினும் திருகோணமலைப் பகுதியின் எமது ஆணையிடும் அதிகாரி திரு. புலேந்திரனும் மட்டக்கனப்பு மாஜி ஆணையிடும் அதிகாரி திரு. குமரப்பனும் இறந்ததால் தன்னியல்பாக ஏற்பட்ட எதிர் விளைவுகள் ஆகும். ஏற்படக் கூடிய எதிர் விளைவுகளையிட்டு நாம் திரு. தீக்சித் அவர்களுக்கு எச்சரிக்கை செய்ததோடு, இந்திய உயர் ஸ்தானிகரும் இந்த எதிர் விளையிட்டு ஜனாதிபதி ஜயவர்தனவை எச்சரிக்கை செய்தார்.

''மேலும் தமது அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் ஜனநாயக உரிமை கொண்ட மக்கள் மீது துவக்கு முனையால் தமது அபிப்பிராயத்தைப் பலாத்காரமாக திணிப்பது, இந்தியாவைப் போன்ற ஒரு ஜனநாயக நாட்டுக்கு உகந்தது அல்ல'' ('ஹிந்து' அக்டோபர் 15, 1986)

பிரபாகரன் எவ்வவு தான் எதிர்ப்புக் காட்டினாலும் இந்திய முதலாளிகள் 'ஜனநாயகம்' துவக்கு முனையில் அவர்களின் அதிகாரத்தையும், கருத்தையும் திணிப்பதே: இன்று இலட்சோப இலட்சம் தமிழ் மக்கள் இந்திய முதலாளித்துவ 'ஜனநாயகத்தின்' தன்மை பற்றிய இப் படிப்பினையை இரத்தத்தின் மூலம் கற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழ் தேசிய இனம் தமது விடுதலையை இந்த இரத்தம் தோய்ந்த 'ஜனநாயகத்துக்கு' முண்டு கொடுப்பதன் மூலமோ அல்லது அதை மூடி மறைப்பதன் மூலமோ அடைய முடியாது. அதை அம்பலபடுத்தி, அதை அவமானப்படுத்தி, அதன் பின்னால் உள்ள முதலாளித்துவ அரசினை தூக்கி வீச தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களை அணி திரட்டும் இயக்கத்தை கட்டி எழுப்ப வேண்டும்.

அதன் பொருட்டு தமிழ் போராளிகளுள் சிறந்த பிரி

(8 ம் பக்கம் பார்க்கவும்)

படிப்பகம்

www.padippakam.com



# சர்வதேச நாணயநிதி மகாநாடு

## வர்த்தக போரின் பரிதாபக் காட்சி

— மரி கிரே

- புலட்டீன் பத்திரிகையிலிருந்து

முதலாளித்துவ வங்கியாளர், சர்வதேச நாணய நிதியத்தின் நிதி அமைச்சர்களின் வருடாந்த மகாநாடு ஏகாதிபத்தியத்தின் உள்ளார்ந்த வர்த்தக போரின் பரவல் உலக கடன் நெருக்கடியின் ஆழம் என்பவற்றின் ஆதிக்கத்துடன் ஆரம்பமாயுள்ளது.

இம்மகாநாடானது அமெரிக்க கனடா திறந்த வர்த்தக தொடர்புகளின் கவலைகளுக்கு மத்தியில், அமெரிக்காவினதும் அதன் முக்கிய பெரிய வர்த்தக கூட்டாளியான கனடாவுக்கும் இடையில் பாதுகாப்பான நடவடிக்கை, எதிர் நடவடிக்கைகளான அலைகளின் பரிதாபக் காட்சியை எழுப்பிய வகையில் ஆரம்பமாகியுள்ளது.

மேலும், 70 மில்லியன் வெளி நாட்டுக் கடனை ஏற்கனவே கொண்டு உள்ளதும் அக்டோபர் 1ம் திகதி கடன் கொடுப்பனவு கால எல்லையின் கடைகி முடிவினை அண்மித்துக் கொண்ட பிரேசில், இதன் மூலம் முக்கிய அமெரிக்க, ஐரோப்பிய, ஜப்பானிய வங்கிகள் மோசமான கடன் என பல மில்லியன்களை கழித்து தள்ள வேண்டிய நிலையில் உள்ளது.

முதலாளித்துவ அமைப்பின் உலகப் பொருளாதார நெருக்கடியின் மத்தியாக, அமெரிக்க முதலாளித்துவத்தின் வங்குரோத்து விளங்குகின்றது வார இறுதியில் கூடிய "ஏழு பிரதான கைத்தொழில் நாடுகளின் குழு" வின் நிதியமைச்சர்கள் வங்கியாளரின் முக்கிய கவனத்தை, அமெரிக்காவின் பலத்த வரவு செலவு திட்டம், வர்த்தக பற்ருக் குறை, களை எடுத்து வரும் அதன் வெளி நாட்டுக் கடன்கள், டாலரின் கட்டுப் படுத்த முடியாத வீழ்ச்சிக்கான மிரட்டல் என்பன ஈர்த்துள்ளன.

அமெரிக்க வரவு செலவுத் திட்டப் பற்ருக்குறையை உடனடியாகவும் பெரிய அளவிலும் குறைக்க வேண்டும் என அமெரிக்க, சர்வதேச வங்கியாளர்கள் நெருக்குவாரம் செய்வது றீகன் நிர்வாகத்தினுள் ஒரு பிரிவினை சிருஷ்டித்து உள்ளது. திறைசேரிச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கனும் வெள்ளை மாளிகையின் முக்கிய அலுவலர் தலைவரான கோவார்ட் பேக்கரும் கிராப்—ருட்மன் சட்டத்தின் வரவு செலவு திட்டத்தை தன்னியக்கமாக வெட்டி விடும் நடவடிக்கையை மீண்டும் அமுல் படுத்தவல்ல உப பிரிவு மசோதாவில் றீகன் கையொப்பமிட வேண்டும் என வற்புறுத்துகின்றனர். இதன் மூலம் 23 மில்லியன் டாலர்களை வரவு செலவு திட்ட பற்ருக் குறையில் இருந்தும் வெட்ட முடியும் என கணிப்பிடப்பட்டுள்ளது.

பென்டகனும் அரசுச் செயலாளருமான சுல்ட்ஸ் இந்த மசோதா இராணுவ செலவினத்தை வெட்டி விடுவதால் இதனை எதிர்க்கின்ருர். முடிவில் தயக்கத்துடன் றீகன் கைச்சாத்திட ஒப்புக் கொண்டு உள்ளார். ஏனெனில் சர்வதேச ரீதியில் பொருளாதார சீர்குலைவுகளை பாரியதாக எதிர் நோக்க நேரும் இதில் கைச்சாத்திடாவிடில் என்று அவர் எடுத்துக் கூறப்பட்ட பின்னர் தயக்கத்துடன் ஒப்புக் கொண்டு உள்ளார்.

நியூயோர்க் டைம்ஸ் இந்த சர்வதேச நாணய நிதி மகாநாட்டின் இக்காட்சியைப் பற்றி "பூமியின் எவ்வொரு நாட்டின் உயர் பொருளியல் அலுவலர்களின் கூட்டமாக விளங்கிய இதன் கையாலாகத தன்மையான காட்சி" என்று கூறியுள்ளது.

டைம்ஸ் மேற்கு ஜேர்மன் நிதி அமைச்சர் ஜேர்காட் ஸ்டோல் ஸ்டன்பேக் „இது மிக இக்கட்டான நிலைமை ஆகும். இக்கடன் நிலையில் இருந்தும் விடுபடுவதற்கான உண்மையான வழி எதுவும் இது வரை காணப்படவில்லை" எனக் கூறியதை மேற்கோளாக காட்டுகின்றது.

பிரதான கைத்தொழில் நாடுகளுக்கும் ஏகாதிபத்திய சக்திகளுக்கும் முன்னைய காலனித்துவ நாடுகளுக்கும் இடையிலான கசப்பான பிளவுகளை பிரதி பலிக்கும் விதத்தில் மொறிஷியஸ் வங்கியாளர் ஒருவர் „இது மிக மோசம் அடைந்து வருகின்றது. சம்பந்தபட்டவர்களை பொறுத்த வரை எந்தவொரு நல்லெண்ணமுமே காணப்படவில்லை" என்று தெரிவித்து உள்ளார்.

மகாநாட்டின் செழுமையும் திட்ட வரையறுப்பாளர் இடையில் காணப்பட்ட கையலாகா தன்மை நிலையும் முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியில் தீர்க்க முடியாத வரலாற்றுப் பண்பினை பிரதிபலிக்கின்றது.

சர்வதேச நாணய நிதியமானது இரண்டாம் உலகப் போரின் பின் முதலாளித்துவத்தின் வளர்ச்சி, ஸ்திர தன்மை என்பனவற்றை முன்னேற்ற உருவாக்கப்பட்ட ஒன்ருகும். ஆயின் அதன் கூட்டங்கள் யாவும் நெருக்கடிக்கான பண்பினையே உறுதிப்படுத்தின. அத்துடன் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதார பக்க பலத்திற்கும் மேலான, அது கட்டி எழுப்பப்பட்ட போருக்கு பின்னைய நிலைமைகளை அத்திவாரமாக கொண்ட தன்மை யாவும் தகர்ந்துள்ளன.

சுருங்கி ஸ்தம்பிதம் அடையும வர்த்தக சந்தைகளின் நிலைமைகளின் கீழ் பல்வேறு முதலாளித்துவ நாடுகளின் முதலாளிகளுக்கு இடையிலான பரந்து வரும் பொருளாதார போராட்டத்தின் நேரடி விளைவாகவே பாதுகாப்பு வதம் என்ற போக்கின் எழுச்சி காணப்படுகின்றது.

உற்பத்தி சக்திகளின் அபிவிருத்திக்கும் மறு புறம் உலக சந்தைக்கும் இடையிலான அடிப்படையான பிரச்சனையில் சம்பந்தப்பட்டு இருப்பது யாதெனில் உற்பத்தி சக்திகளின் தனியார் மயமான முதலாளித்துவ உடமையும் மறுபுறத்தில் உலகம் போட்டி ஈடும் முதலாளித்துவ நாடுகளாக பிரிவு உண்டு இருப்பதும் விளங்குகின்றது.

சர்வதேச நாணய நிதியானது தனது "உலக பொளாதார நோக்கு" என்பதில் ஓர் செழுமையான வெளியீட்டை வெளியிட்டு, கைத்தொழில் சக்திகளின் 2.5% இருந்து 2.75 வீதமாக மிக மெதுவாக வளர்ச்சி ஒன்றையே சுட்டிக் காட்டி உள்ளது. இது ஆபிரிக்க, லத்தின் அமெரிக்கா ஆசியாவின் பொருளாதாரங்களை கடன் ஆழத்தில் செல்ல விடாது தடுக்கும் ஆகக் குறைந்த அளவாக கருதப்பட்ட 3 வீதத்திற்கும் குறைந்ததாகும்.

இந்த அறிக்கையானது அமெரிக்காவின் றீகன் நிர்வாகத்திற்கு, அமெரிக்க வரவு செலவு திட்டத்தின் அடுத்த ஆண்டு பற்ருக்குறை 50 மில்லியனுக நிர்வாகம் உத்தேசித்த அளவிலும் கூடியதாக அமைவதையும் அதிகரித்த வட்டி வீதம், கணக்கியல் பற்ளுக்குறை 1991 ல் 150 மில்லியன் டாலர்களாக விளங்கப் போகும் தன்மை என்பவற்றை சுட்டிக் காட்டிப் புலப்படுத்தி சவால் விடுகின்சது.

இதிலும் மேலாக சர்வதேச நாணய நிதி 1995 ல் அமெரிக்காவின் வெளி நாட்டுக் கடன் அதன் மொத்த தேசிய உற்பத்தியின் 22 வீதத்துக்கு சமமான தொகையாக விளங்கலாம் என்று சுட்டிக் காட்டுகின்றது.

"ஏழு நாடுகளின் குழுவினுல்" முன்னேற்றமானதாக கருதவல்ல ஒரே ஒரு கொள்கையாக, ஒடுக்கப்பட்ட கடன் நாடுகளின் பொருளாதாரத்தை சுரண்டுதலை பரவல் ஆக்கும் அதே வேளையில் ஒவ்வொரு நாடுகளின் தொழிலாள வர்க்கத்தின் வாழ்க்கை தரத்தின் மீது தாக்குதலை தொடுப்பதுமான மேற்கு ஜேர்மன் ஜப்பானிய மூல்தனம் உடனுன பலத்த சேர்க்கை உடன் டாலரை பலப்படுத்தி வைப்பதை தொடர்ந்து கையாடல் காணப்படுகின்றது.

நெருக்கடியானது வர்த்தகம், கடன் வரவு செலவு திட்ட பற்ருக்குறை என்ற முழுக் கட்டங்களிலும் பரவுகின்றது.

உலக சந்தையில் தகர்வும் மூலதன குவியல்கள் கடன் மலையின் வீழ்ச்சியுமே காணப்படுகின்யுது. பிரேசில், மெக்ஸிகோ ஆல்லது ஆர்ஜன்ரீனு போன்ற முக்கிய கடனுளி நாடுகள் சடன் செலுத்துவதில் இருந்து தவறினுல் உலக வங்கி அமைப்பு ஆகிய தொடர்ச் சங்கிலி அறுந்து விடுமோ என வங்கியாளர் அச்சமூறுகின்றனர்.

உலக முதலாளித்துவ பொருளாதாரம் ஆனது தரம் மிக்கதான ஓர் பங்கீட்டுக்கு எடுத்து செல்ல கணிசமான முரண்பாடுகளை கூடி எழுப்புவதான நிலயை நெருங்கி பாரிய சமூக, வர்க்க எழுச்சிகளை உருவாக்கி விட்டுள்ளது.

ஏற்கனவே தென் கொரியா, தென் ஆபிரிக்கா ஹெயிட்டி போன்ற நாடுகளின் தொழிலாள வர்க்க புரட்சிகர இயக்கங்கள், அமெரிக்கா உள்ளடங்கலான முக்கிய முதலாளித்துவ ஏகாதிபத்திய அரசியல் பொருளாதார நெருக்கடியில் இருந்து எழுந்த புரட்சிகர போராட்டங்களை புலப்படுத்திக் காட்டி உள்ளன.

இது ஆசியா, ஆபிரிக்கா, லத்தின் அமெரிக்கா தொழிலான வர்க்கங்களினதும் ஏகாதிபத்திய மத்தியில் தூங்கி கொண்டு உள்ளன. வாஷிங்டனில் கூட்டுச் சேர்பவர்களுக்கும் பரிதாப காட்சியாகும்.

முதலாளித்துவ சொத்துடமை, உற்பத்தி சக்திகளுக்கும் இலாபத்துக்கான உற்பத்திக்குமான முதலாளித்துவ சட்ட அமைப்புக்குள் தொழிலாள வர்க்கத்திற்கான எந்த ஒரு தீர்வுமே கிடையாது. இப்பொருளாதார நெருக்கடி வேலை இல்லா திண்டாட்டத்தை உக்கிரம் ஆக்கல், வரவு செலவு திட்ட வெட்டு, வறுமை என்பவற்றை மோசம் ஆக்குவது மட்டும் அன்றி தொழிலான வர்க்கம் தனது சுய சோசலிச திட்டத்தை அடிப்படையாக கொண்ட கைத்தொழில் வங்கிகளை தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் முதலாளிகளுக்கு நஷ்ட ஈடின்றி தேசியமயம் ஆக்கலை அடிப்படையாக கொண்ட திட்டத்தை முன்னேற்றி செல்லும் வரை, உற்பத்தி செய்து கொண்டே இருக்கும்.

இந்த புரட்சிகர திட்டங்களுக்காக தேவை, ஓர் திட்டவட்டமான அரசியல் போராட்டத்தை முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக தொடுப்பதை காட்டுகின்றது. இந்த போராட்டம் சர்வதேச ரீதியில் தொழிலான வர்க்கத்தை ஒவ்வொரு நாட்டிலும் இணைந்து கொண்ட போராட்ட அடிப்படையில் தொடுக்கப்பட வேண்டும். ஏனெனில் இன்று உலக பொருளாதார அபிவிருத்தியானது ஒவ்வொரு நாட்டிலும் முன் இருந்ததிலும் பார்க்க மோசமாக தொழிலாள வர்க்க நிலைமைகளை உறுதிப்படுத்தி உள்ளது.

தொழிலாள வர்க்கத்தின் சுதந்திர அரசியல் அமைப்பிற்கான முதலாவது நடவடி

(7 ம் பக்கம் பார்க்கவும்)

படிப்பகம்

# எம் — பண்டா முதலாளி

# பரிந்துரையாளரின் முக

## [அமெரிக்க ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் 1987 — செப்டம்

ஜூலை 29 ல் கைச்சாத்தான இந்திய — இலங்கை ஒப்பந்தமும் தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தினை நிராயுதபாணி ஆக்க சுமார் 13,000 இந்திய துருப்புக்களின் வடக்கு, கிழக்கு மாகாண நுழைவும், பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் மாஜி பொதுச் செயலாளர் மைக்கேல் பண்டாவினால் முன் வைக்கப்பட்ட அரசியல் வேலைத்திட்டத்தின் முற்று முழுதான வங்குரோத்தினையும் துகிலுரித்து காட்டி உள்ளது. மனித இனத்தின் எதிர் காலத்துக்கான ஒரே நம்பிக்கை ஸ்டாலினிச முதலாளித்துவ தேசியவாதங்களை தழுவிக் கொள்வதே என்ற முடிவுடன் 1986 பெப்ரவரியில் உலக ட்ரொட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் இருந்து பண்டா பகிரங்கமாக பிரிந்தார்.

முக்கியமான தமிழ் தேசிய விடுதலை இயக்கமான தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை (L. T. T. E:) நிராயுதபாணிகள் ஆக்கி இலங்கை முதலாளித்துவ அரசின் ஆளுமையைத் திரும்பவும் கட்டி எழுப்ப இந்திய இராணுவம் சுறுசுறுப்பு உடன் இயங்கி வந்த சமயத்தில் பண்டா ஆகஸ்ட் 1 ல் லண்டனில் ஒரு சொற் பொழிவை நிகழ்த்தினார்.

அவர், இலங்கையின் வட பாகத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் போக்குக்கு பூரணமாக சரணாகதி அடையும் படியும் தென் இலங்கையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வலுப்பிள்ளை பிரபாகரனுக்கு மரண தண்டனை கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடாத்தும் குட்டி முதலாளித்துவ இனவெறி மக்கள் விடுதலை முன்னணிக்கு (J. V. P.) ஆதரவளிக்கும் படியும் கோரினார்.

1985 — 86 ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினுள் இடம் பெற்ற பிளவுகளில் சம்பந்தப்பட்ட வர்க்க சக்திகளின் தன்மைக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் பண்டாவின் பேச்சு, வர்க்க நனவு உள்ள சகல தொழிலாளியையும் கவனமாக ஆயும்படி அழைக்கின்றது.

"இது முதலாளித்துவத்தின் உலக நெருக்கடியினால் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராகக் கட்டவிழ்க்கப்பட்டு உள்ள பேரளவிலான பிற்போக்குச் சக்திகளுக்கும் அனைத்துலகக் குழுவினுள் இருந்த படி ட்ரொட்ஸ்கிசத்தின் தத்துவார்த்த, அரசியல் அடிப்படைகளை எதிர்த்த சக்திகளுக்கும் இடையேயான தொடர்பினைத் திட்டவட்டமாக நிலை நிறுத்துகின்றது.

பண்டா 1986 பெப்ரவரியில் ட்ரொட்ஸ்கிசத்தை பகிரங்கமாக திறந்தமையானது அவர் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரத்தினையும் சோசலிசத்தின் சாத்தியத்தினையுமே நிராகரித்தது ஆகும் என அனைத்துலகக் குழு ஏற்கனவே சுட்டிக் காட்டி உள்ளது.

(டேவிட் நோர்த் எழுதிய 'நாம் பேணும் மரபு உரிமைகள் என்ற தொடர் கட்டுரைகளைப் பார்க்க)

ட்ரொட்ஸ்கிசத்துடனான



மைக் பண்டா

தனது பிரிவினை அறிவிக்கும் பொருட்டு பண்டா எழுதிய பெரும் பத்திரத்தினை தொ. பு. க. வின் கிளிப் சுலோற்றர் கன்னை நா. அ. அ. குழுவுடனான தனது சந்தர்ப்பவாத பிளவினை அமுல் செய்ய உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டது. 'அனைத்துலகக் குழுவைப் புதைக்க வேண்டியதற்கான 27 காரணங்கள்' என்ற தலைப்பிலான இப்பத்திரம், ஒரு தசாப்த காலமாக குட்டி முதலாளித்துவ வர்க்க சக்திகளுக்கும், அவற்றின் சமூக நிலைப்பாடுகளுக்கும் பண்டா அடிபணிந்ததன் வெளிப்பாடாகும்.

இன்று பண்டா, ஒரு புறத்தில் பேராசை பிடித்த ஏகபோக முதலாளித்துவத்துக்கும் மறு புறத்தில் பெரு வளர்ச்சி கண்டு வரும் தொழிலாள வர்க்கப் போக்குக்கும் இடையே அகப்பட்டு போயுள்ள குட்டி முதலாளி வர்க்கத்தின் படு பிற்போக்கு பகுதியினரின் பிரதி நிதியாக வேகமாக மாறி வருகின்றார். இவர்கள், தொழிலாள வர்க்க இயக்கத்தின் அழிவுடன் கூடிய விதத்தில் உலகப் பொருளாதாரத்தை அணுமயம் ஆக்கும் படி கோரி வருகின்றனர்.

எவரேனும் பண்டா ட்ரொட்ஸ்கிசத்தை நிராகரித்ததன் மூலம் பெற்ற புதிய அறிவுச் சுடருடன் இந்திய — இலங்கை உடன்படிக்கையை எதிர்த்து போராடவும், தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை அடையவும் வேண்டிய வழிகளைக் காட்டுவார் என்ற நம்பிக்கை உடன் ஆகஸ்ட் 1 ல் லண்டனில் நடைப் பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு இருப்பின் அவர் தமது வாழ் நாளில் பெற்றிராத அதிர்ச்சியையே கண்டிருப்பார்.

### தேசியவாத முன்நோக்கு

ஜனநாயகப் புரட்சியில் குட்டி முதலாளி வர்க்க தேசியவாத முன் நோக்கின் வரலாற்று மலட்டுத்தனமும் குறுகிய நோக்கும் முற்றாக அம்பலப்படுத்தப்பட்டுக் கொண்டு உள்ள வேளையில், பண்டா தொழிலாள வர்க்க புரட்சிகரப் பாத்திரத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு அனைத்துலகவாத முன் நோக்கினை எந்த விதத்திலும் முன் வைக்க முயன்றார் இல்லை.

அதற்குப் பதிலாக தொழிலாள வர்க்கத்தில் இருந்து பூரணமாக திசை திரும்பி, அவர் அதிக தேசியவாதத்தினைக் கோரியதோடு தமிழர்களை தமது ஜனநாயக உரிமைகளை அடைவதற்கு தெற்கில் பிரமாண்டமான இனவாத அணி திரளல் இடம் பெறும் வரையும், இந்தியா 'பால்கன்' தீபகற்பம் ஆக்கப்படும் வரையும் பொறுத்து இருக்கும் மாறும் வேண்டினார்.

இந்திய — இலங்கை ஒப்பந்தம், தேசிய விடுதலை இயக்கங்களை நசுக்கவும் அத்தோடு இப்பிராந்தியம் பூராவும் உள்ள தொழிலாள வர்க்கத்தினை தாக்குவதற்கும் தமது கூட்டு படைகளை பாவிக்க இரண்டு முதலாளி வர்க்க அரசுகள் இடையே செய்து கொள்ளப்பட்ட ஒரு பிற்போக்கு உடன்படிக்கையாகும்.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டப் படைகளை ஒழித்துக் கட்டும் இந்திய முதலாளி வர்க்கத்தின் நிர்வாணத் தலையீடானது, ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய ஜனநாயக உரிமை தேட்டங்களை சோசலிசப் புரட்சி முன்நோக்கின் புறம்பாக — இந்தியத் துணைக் கண்டம் பூராவும் பிற்போக்கு தேசிய முதலாளி வர்க்க இலங்கை, இந்திய பாகிஸ்தான், பங்களாதேஷ் அரசுகளையும் யுத்தத்தின் பின்னைய தீர்வுகளையும் தூக்கி வீசாமல் உச்சரிக்க முடியாது என்பதை திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தப் பிற்போக்கு தேசிய முதலாளி வர்க்க ஆட்சியாளர்கள் இடையே என்ன தான் கருத்து வேறுபாடுகளும், பகைமைகளும் இருந்தாலும் இப்பிராந்தியத்தில் ஏற்படும் எந்தவொரு அசம நிலையும் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெள்ளத்தின் கதவுகளைத் திறக்கும் என்ற பொது அச்சத்தினால் அவர்கள் ஐக்கியம் பூண்டு உள்ளார்கள். ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய ஜனநாயக உரிமைகளை இந்த அரசுகளுக்கு இடையேயான சாகஜங்கள் மூலமோ அல்லது இவற்றில் ஒன்றினைந்தோ அல்லது மற்றதினதோ உதவி உடன் அரச அமைப்புக்களை மறு ஒழுங்கு செய்வதன் மூலமோ வெற்றி கொள்ள முடியும் என் எந்தவொரு நம்பிக்கையு முழுமனே சிதறிப் போயிட்டது.



ராஜீவ் காந்தி

தமிழ் தேசிய இனத்தி பிரதான விடுதலை இயக் மான தமிழ் ஈழ விடுதலை புலிகள் இயக்கமும் இ றைய நிலைமைக்குப் பொ ப்பாளி ஆகும். ''தேசி பிரச்சினைகளுக்கு தேசிய தீ வுகள்'' என்ற ஒரு அர யல் முன்நோக்கின் அடிப் டையில் தேசிய விடுதலை போராட்டத்தை நடாத்தி கொண்டு, தமிழ் ஈழ வி தலைப் புலிகள் (L. T: T: E இயக்கம் இந்திய, இலங் முதலாளி வர்க்க அரசுகளை நிர்மூலமாக்கும் முன்நோ கினை ஒரு போதும் மு வைத்தது இல்லை. தமி மக்களின் தேசிய ஒடுக் முறையின் ஊற்று வாய் இவற்றின் விசித்திரமா இருப்பும், நிர்மாணமும் இடையுறுகளுமேயாகும்.

தமிழ் ஈழ விடுதலைப் பு களின் அரசியல் வேலைத்தி டம், நாற்றம் எடுக்கு முதலாளி வர்க்க அரசுகளின் சுற்றாடலில் ஒரு தனியா தமிழ் அரசினை உருவாக்கு தே. இந்திய இலங்கை மு லாளி வர்க்க அரசுகளுக் சமனாக தமிழருக்கு இன்னு மோர் அரசினை அமைப்பதே தாம் உருவாக்கப் போகு அரசின் வர்க்கத் தன்மை யைப் பற்றி விடுதலைப் புலி கள் இயக்கத் தலைவர்கள் ஒரு தெளிவான கருத்தின ஒரு போதும் வெளியிடா போதிலும்' இலங்கை — இந் திய முதலாளி வர்க்க அர சுகளுக்கு எதிராகப் போராட ஒரு போராட்ட முன்நோக் கினை அவர்கள் முன் வை

www.padippakam.com



# த்துவ தேசியவாதத்தின் முடி கிழிக்கப்பட்டது

(முதலாம் பாகம்)

— கீர்த்தி பாலசூரிய

29 ம் திகதி புலட்டீன் பத்திரிகையிலிருந்து]

ாது அவர்கள் ஒரு தமிழ் முதலாளி வர்க்க அரசுக்காகவே போராடி வருகின்றனர்கள் என்பதை நன்கு நிரூபித்துள்ளது.

அதனது முழு முன்நோக்கும் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் தமிழ் முதலாளிகள் சுரண்டுவதற்கான தனி இராஜ்யம் ஒன்றைச் சிருஷ்டிப்பதும், தமது எண்ணப் படி ஏனைய முதலாளி



ஜயவர்தன

த்துவ சக்திகளுடன் உடன்படிக்கைகளுக்குச் செல்வதுமே. சுருங்கச் சொல்லின் இந்த வர்க்க நிலைப்பாடு காரணமாகவே தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் காந்தி — ஜயவர்தன உடன்படிக்கையை எதிர்க்க முடியவில்லை. இவைப் பற்றி நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் மட்டுமே தமிழ் வெகுஜனங்களை எச்சரிக்கை செய்தன.

1986 அக்டோபர் 10 ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இரண்டாவது தொடர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட "புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்நோக்கும் பணிகளும்" என்ற பிரேரணை பின்வருமாறு குறிப்பிட்டது:

"தமிழ் மக்கள் தமது சொந்த அரசினை அமைக்கும் உரிமையை முன் வைக்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எப்போதும் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தில் இருந்தே முன் செல்கின்றது. ஆதலால் தமிழ் முதலாளி வர்க்கம் சிறப்பு உரிமைகளுக்காகச் செய்யும் பிரயத்தனங்களுக்கு எந்த விதமான சலுகையும் காட்டாது. தேசிய விடுதலைப் போராட்டத்தின் உள்ளே புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எப்போதும் தொழிலாள வர்க்க நலன்களை ஆதரிப்பதோடு தமிழ் முதலாளி வர்க்கத்தில் இருந்தும், குட்டி முதலாளித்துவ வர்க்கங்களில் இருந்தும் அதன் சுயாதீனத்தை நிலை நாட்ட போராடுகின்றது. தமது சொந்த அரசினை நிறுவ மக்களுக்கு உள்ள உரிமையை நிபந்தனையின்றி காக்க முன் நின்று வரும் அதே சமயம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வேலைத்திட்டம் ஏழை விவசாயிகள் உடனும், தெற்கில் உள்ள வெகுஜனங்கள் உடனும் நெருங்கி இணைந்த தமிழ் தொழிலாள வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஜனநாயகப் புரட்சி வெற்றி காணும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. சுய நிர்ணயத்துக்கான தேசிய போராட்டத்தின் தலைமையினை முதலாளி வர்க்கத்திடம் கையளிக்காத புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், சிங்கள ஒடுக்கு முறைக்கு எதிரான தேசியப் போராட்டத்தை ஏகாதிபத்தியத்திற்கும் தமிழ், சிங்கள முதலாளி வர்க்கங்கள் இடையே உள்ள அதன் உள்ளூர் ஏஜன்டுகளுக்கும் எதிராக சோஷலிசப் புரட்சி உடன் இணைப்பதன் மூலம் தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை வென்று எடுக்க முடியும் என வலியுறுத்துகின்றது. தேசிய விடுதலைப் படைகளினால் நடாத்தப்படும் ஆயுதப் போராட்டத்தின் முற்போக்குப் பண்பை அங்கீகரிக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தொழிலாளர் — விவசாயிகளின் சோவியத் சபைகளை அமைக்கவும், ஏகாதிபத்திய முதலாளித்துவ சொத்து முறையினை நிர்மூலமாக்கவும் போராடுவதன் மூலம் அப்போராட்டத்தினைப் போஷித்து வளர்த்து, ஆழமாக்கப் பாடுபடுகின்றது.

('போர்த் இண்டர்நஷனல்' — தொகுதி — 14 இல. 1: மார்ச் 1987 பக்கம் — 21)

## அபாயங்கள்

தேசிய விடுதலைப் போராட்டத்தில் ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் முன்நோக்கினை இங்கு னம் தெளிவு படுத்தியதன் பின்னர், பிரேரணை தமிழர்களின் தேசிய விடுதலைக்கு தமிழ் முதலாளி வர்க்க, குட்டி முதலாளி வர்க்க கட்சிகளின் அரசியல் போக்குக்களால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களைச் சுட்டிக் காட்டியது.

"(1.) புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தமிழர் விடுதலைக் கூட்டணியை தமிழ் முதலாளி வர்க்கத்தின் முக்கிய பிரதி நிதியாகக் கொள்கின்றது. ஆயுதப் போராட்டத்தின் எதிரிகளான இவர்கள் தேசிய சுதந்திரத்துக்காக கொள்கை சார்ந்த, உறுதியான போராட்டத்தை நடாத்த இலாயக்கற்றவர்கள். அதன் முழு வரலாறும் இந்திய — இலங்கை முதலாளி வர்க்கங்களுக்கு வெட்கமின்றி 'பந்தம்' பிடித்தல், கோழைத் தனமான சமரசங்கள், முழுப் படியான காட்டிக் கொடுப்புக்களால்



பிரபாகரன்

நிறைந்து போயுள்ளது. சிங்கள ஒடுக்கு முறையாளரிடம் இருந்து சுதந்திரம் பெறும் அவாவைக் காட்டிலும் இது தமிழ் வெகுஜனங்களைக் கண்டு அஞ்சுகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் துரோக சுயரூபத்தை அம்பலப்படுத்தும், தேசிய விடுதலை இயக்கத்தை தேசிய முதலாளிகளின் நலன்களுக்கு அடிமைப் படுத்தும் அவர்களின் முயற்சியை அம்பலப் படுத்தவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொறுப்பாகும்.

"(2.) தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் போன்ற நானாவித தமிழ் விடுதலை அமைப்புக்களை புரட்சிகரத் தேசியவாதிகளாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இனம் காண்கின்றது. தமிழ் தாயகத்தை இராணுவ ரீதியில் விடுதலை செய்யும் பொருட்டு அவர்கள் நடாத்தி வரும் திடசங்கற்பம் மிக்க போராட்டம் இடம் பெற்று வரும் அதே வேளையில், அவர்களின் குட்டி முதலாளித்துவ சிந்தனையும், வேலைத்திட்டம் இன்மையும் வெற்றியை எட்டுவதற்கு அவசியமான அளவில் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அணி திரட்டா வண்ணம் அவர்களை தடுத்து உள்ளது. மேலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அழிவு நிறைந்த அழுத்தங்களை இவர்களால் எதிர்த்துப் போரிட முடியாது உள்ளது. இந்திய முதலாளி வர்க்கத்தின் துரோகக் குழிபறிப்புக்களில் இருந்து தமிழ் விடுதலை இயக்கத்தின் சுயாதீனத்தை நிலை நாட்டுவதில் வெற்றி பெற முடியாது உள்ளது. இக்குழுக்களின் குட்டி முதலாளித்துவ தன்மையில் இருந்து ஊற்றெடுக்கும் அவர்களின் வேலைத்திட்டம் சம்பந்தமான குழப்பங்கள் அவர்களை இந்திய முதலாளி வர்க்கத்தினதும், மாஸ்கோவ் — பீகிங் ஸ்டாலினிஸ்டுகளதும் பொறிகளில் அகப்படச் செய்யும் அரசியல் நச்சு வளையத்துக்கு இட்டுச் செல்கின்றது. சகல நிலைமைகளிலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தனது அரசியல் சுயாதீனத்தை பேணிக் கொண்டு, புரட்சிகர தேசியவாதிகளில் இருந்து சுயாதீனமான முறையில் தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டுகின்றது. அவ்வாறே அவர்களின் கொள்கைகளை விமர்சிக்கும் உரிமையையும் கொடிருக்கும்,'

(அதே நூல் — பக்கம் — 22)

அத்தோடு மிகச் சமீபத்தில் சகல குட்டி முதலாளித்துவ குழுக்களும் பண்டா போன்ற தனியாட்களும் யாழ்ப்பாண குடா நாட்டுக்கான இந்தியாவின் விமான உணவுப் பொட்டல விநியோகத்தை தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு மாபெரும் திருப்பு முனையாக கரகோஷம் செய்த வேளையில் இந்திய, இலங்கை ட்ரொட்ஸ்கிஸ்டுகள் பின்வருமாறு எச்சரிக்கை செய்தனர்:

"இந்த குட்டி முதலாளி தலைமைகளின் வர்க்கத் தன்மை காரணமாக சகல துரோகங்களும், இரத்தம் சிந்தல்களும், கழுத்தறுப்புக்களும் புதுடில்லி அரசாங்கத்துடன் கூட்டாக இனவாத தமிழ் முதலாளிகளான தி: மு. க., அ. தி. மு. க. வினால் ஒழுங்கு செய்யப்பட்டன. இவற்றுக்குப் பின்னரும் இந்திய முதலாளி வர்க்கம் பற்றிய விடுதலை குழுக்களின் குட்டி முதலாளித்துவ பிரமைகள் சற்றேனும் குறைந்து போகவில்லை.

"சுயநிர்ணய உரிமையானது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் கோரிக்கைகளில் ஒன்றாகும். தேசிய ஒடுக்கு முறையை ஒழித்துக் கட்டும் தமிழ் ஈழ வெகுஜனங்களின் வீரம் செறிந்த முயற்சிகள் — அடிமைப் படுத்தப்பட்ட தமிழ் ஈழத் தேசியத்தின் தலைவன் என்ற ரீதியில் தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே பூரணத்துவம் செய்ய முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக அதன் விவசாய பரந்த மக்களின் தலைவனாக தனது சொந்த போராட்ட விதி முறைகளை கடைப் பிடித்து, அதன் வர்க்க சர்வாதிகாரத்தை நிலை நிறுத்துவதன் மூலம் இதைச் சாதிக்கும். இப்பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சகல உற்பத்தி சாதனங்களையும் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கும். நிலத்தை தேசியமாக்கி உழுபவனுக்கு நிலம் வழங்கும், தொழிலா

(6 ம் பக்கம் பார்க்கவும்)

படிப்பகம்

www.padippakam.com



# எம் - பண்டா முதலாளித்துவ . . .

[ 5ம் பக்கத் தொடர்ச்சி ]

ளர்களையும் விவசாயிகளையும் ஆயுதபாணிகளாக்கி தொழிலாளர் — விவசாயிகள் படை அணிகளை நிறுவும். இவை தொழிலாளர் — விவசாயிகள் சோவியத்துக்களின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும். சகல கிராமிய கடன் வழிகளையும் ஒழிக்கும்: தேசத்தின் சகல வளங்களையும் திரட்டி விடுதலைப் போராட்டத்தின் தேவைகளை இட்டு நிரப்பக் கூடிய சகல உற்பத்தி நடவடிக்கைகளையும் ஒழுங்கு செய்யும்;

''இந்த வேலைத்திட்டம், இந்திய, இலங்கை, அனைத்துலக தொழிலாள வர்க்க சகோதரர்கள் இடையே நெருக்கமான வர்க்க தொடர்புகளை நிலை நிறுத்தும் அவசியத்தை வேண்டி நிற்கின்றனர். இத்தகைய ஒரு உறுதியான வேலைத்திட்டத்தின் ஊடாக மட்டுமே தொழிலாளர்களும், விவசாயிகளும் ஒடுக்கப்படும் மக்களும் அவர்களின் சொந்த முதலாளி வர்க்கங்களுக்கு எதிராக அணி திரளவும், தமிழ் ஈழ போராட்டத்தை பாதுகாக்கவும் முடியும். இந்திய முதலாளி வர்க்கத்தின் சதிகளை தோற்கடிப்பதற்கான வழியும் கூட இதுவே.

''தமிழ் ஈழம் வெகுஜனங்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு உதவ, இந்திய தொழிலாள வர்க்கம் ஒரு முக்கிய பாத்திரத்தை வகிக்க வேண்டி உள்ளது. இந்திய — இலங்கை முதலாளித்துவ அரசுகள் இரண்டினதும் மிகவும் குள்ளமான பாதுகாவலனான இந்திய ஆளும் வர்க்கத்தை அவர்கள் அம்பலப் படுத்தி தோற்கடிக்க வேண்டும். இந்தியாவின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் ஆட்சி செய்யும் வரையில், அவர்கள் ஈழம் வெகுஜனங்களின் தேசிய விடுதலை இயக்கத்தை ஒழித்துக் கட்ட தம்மாலானது அனைத்தையும் செய்வர். மோசடி 'உதவியின்' பின்னால் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை மூலைக்குள் முடக்கி, அவர்களை இலங்கை முதலாளி வர்க்கத்திடம் ஒப்படைக்கும் கடைகெட்ட திட்டம் அடங்கியுள்ளது.
('புலட்டீன்' — 1987 ஜூலை 21 — பக்கம் 11)

## சமூகப் புரட்சி

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் 1987 ஜூன் 5 ல் வெளியிடப்பட்ட அறிக்கையும் விடுதலை இயக்கத்தினை அச்சுறுத்தி வரும் அபாயங்கள் குறித்து எச்சரிக்கை செய்தது:

''தேசிய விடுதலைப் போராட்டம் தமிழ் தேசிய இனத்தின் பெரிதும் ஒடுக்கப்படும் தட்டினரை விழிப்படையச் செய்து உள்ளதை முதலாளி வர்க்கத்தின் சகல பகுதியினரும் மோப்பம் பிடித்து உள்ளதோடு அச்சமும் கொண்டுள்ளனர்.

இது தேசிய ஜனநாயகக் கோரிக்கைகளையும் கடந்து சமூகப் புரட்சியின் பிரச்சினைகளை தோற்றுவிக்குமென அஞ்சுகின்றனர். இது யூ. என். பி. ஆட்சிக்கு மட்டுமன்றி, காந்தி ஆட்சிக்கும் கூட தெளிவாகி வருகிறது. அத்தகைய ஒரு அபிவிருத்தி துணைக் கண்டம் பூராவும் சமூக புரட்சி தீயை சுவாலை விடச் செய்யும்;

''தொழிலாள வர்க்கத்தையும் விவசாயிகளையும் அணி திரட்டும் சமூக — பொருளாதார வேலைத்திட்டம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இல்லாது போகினும் விடுதலைப் போராட்டத்தின் நீடிப்பானது தொழிலாள வர்க்கம் தனது வரலாற்று பயணத்தை இட்டு நிரப்பும் பொருட்டு போராட்டத்தின் முன்னணிக்கு அழைக்கப் படுவதற்கான சாத்தியங்களை நெருங்கச் செய்து உள்ளது. இது இந்திய இலங்கை ஆளும் வர்க்கங்களை விடுதலைப் புலிகள் இயக்கத்தை நசுக்குவதானதும் விடுதலை யுத்தத்தை துண்டிப்பதானதும் அவசியத்தை என்றும் இல்லாதவாறு உணரச் செய்துள்ளது;

''தமிழ் தொழிலாள வர்க்கத்தினதும், ஆயுத போராட்டத்தினை நடாத்தும் தமிழ் ஈழ பிடுதலைப் புலிகளதும் தலைகளுக்கு மேலான காந்தி ஆட்சியின் 'மனிதாபிமான உதவி' ஒன்றில் ஆறுதலும் இல்லை. யூ: என். பி. யின் கொலைகார கொள்கைகளில் இருந்து வேறுபட்டதும் இல்லை. இந்த 'நிவாரண நடவடிக்கைகள்' எனப் படுபவை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சிதறடிக்கும் பொருட்டு யூ. என். பி. யினால் நடாத்தப்பட்டு வரும் யுத்தத்தினைப் பூர்த்தி செய்யவும், காந்தி — ஜயவர்தனா தீர்வினை ஏற்றுக் கொண்டு, விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் முதலாளித்துவ தலைமையின் ஆளுமையை திரும்பவும் யாழ்ப்பாணத்தில் நிலை நிறுத்தவுமே செய்யப் படுகின்றன என்பதை நாம் திரும்பவும் அழுத்தம் திருத்தமாகக் கூறி வைக்கின்றோம்.
('புலட்டீன்' — ஜூலை — 3, 1987 — பக்கம் — 10 — 11)

ஆகஸ்ட் 1 ல் நிகழ்த்திய பேச்சில் பண்டா, இந்திய விமான பொட்டலங்கள் வீச்சின் ஆதரவாளர்களில் தாமும் ஒருவர் என்பதை ஒப்புக் கொண்டார். ஏனைய பல குட்டி முதலாளித்துவத் தீவிரவாதிகள் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான 'ஆதரவு' தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கிய வேலைத்திட்டத்தினை அடிப்படையாக அன்றி, ஏனைய பல குட்டி முதலாளித்துவ பிழைகளில் இருந்து ஊற்றெடுக்கும் ரடிகல் வாதிகளதும் பலஸ்தீனிய கதை கதைப்போரைம் போன்றும் குட்டி முதலாளித்துவ நன்னடக்கையாளரைப் போலவும் இரண்டு முதலாளித்துவ அரசுகளுக்கு இடையேயான ஒரு பிற்போக்கு யுத்தத்தின் மூலம் ஒரு ஒடுக்கப்படும் தேசியத்தின் விடுதலைக் கிடைக்கும் என்பதை பண்டா மனக்கண்ணால் கண்டார். தமிழ் தேசிய இனத்தின் மலட்டு முதலாளி வர்க்கத்தின் போக்கும் இதுவே. இவர்கள் அச்சமயத்தில் இந்திய அரசாங்கத்துடன் அணி திரண்டனர். சில சலுகைகளைப் பெறுவதற்கு ஒரு முதலாளித்துவ அரசுக்கு எதிராக இன்னொன்றை ஆதரிப்பதால் இது போதுமான நெருக்குவாரம் கொடுக்க முடியும் என்று நம்பியது.

இந்திய முதலாளி வர்க்கம், தனது சொந்த இராணுவத்திற்கான ஆதரவை தம்பட்டம் அடிக்கவும், இந்திய தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான செயற்பாட்டையும், அணி திரளலையும் மூழ்கடிக்கும் யுத்த வெறிக் கூச்சல்களை கட்டவிழ்க்கவும், இறுதியாக தேசிய விடுதலை இயக்கத்தின் மீதான தனது இராணுவ இயந்திரத்தின் மேன்மையை நிரூபிக்கவும், யாழ்ப்பாணக் குடா நாட்டின் மீதான தமது இராணுவ ஆக்கிரமிப்பை ஆதரிக்கும் படி குட்டி முதலாளித்துவத்தின் ஒரு பகுதியினரை நெருக்கியுமே விமான பொட்டலங்கள் வீச்சினை நடாத்தியது;

பண்டாவைப் போன்று இந்த இந்திய முதலாளி வர்க்கத்தின் இராணுவ தசை முறிப்புக்களுக்கு ஆதரவு அளித்த சகலரும், தமிழரின் உதவிக்கு ஓடி வரும் இந்திய முதலாளி வர்க்கத்தின் வல்லமை பற்றிய நப்பாசைகளைப் பரப்பவும், அந்த விதத்தில் காந்தி — ஜயவர்தனா சதிக்கு முன்னதாக தொழிலாள வர்க்கத்தை அரசியல் ரீதியில் நிராயுதமாணியாக்கினர்.

இந்திய. இராணுவம் கெரில்லாக்களை நிராயுதபாணியாக்க ஏற்கனவே தொடங்கி விட்ட இன்றைய நிலையில் பண்டா தாம் விமானப் பொட்டலங்கள் வீச்சினை ஆதரித்த போதிலும் இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பியதை எதிர்த்ததாக ஏனெனில் ''இது இலங்கையில் ஓர் லெபனான் நிலைமையை தோற்றுவிக்கும்'' என்பதால் சொல்கிறார். ஆனால், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தேசிய விடுதலைக்கான முழு மூலோபாயமும் இந்திய முதலாளித்துவ அரசின் ஆதரவைப் பெறுவது அல்லது குறைந்த பட்சம் அதனை நடுநிலை வகிக்கச் செய்வதையே அடிப்படையாகக் கொண்டது என்பதை பண்டா நன்கு அறிவார்.

இந்திய முதலாளித்துவ அரசு சம்பந்தமான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மனப் பாங்கினை காட்ட நாம் இங்கு ஓர் உதாரணத்தை குறிக்கின்றோம். இது 1986 ஜூன் 30ல் 'இந்தியா ருடே' சஞ்சிகைக்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் வழங்கிய பேட்டியாகும்

''கேள்வி: இந்திய அரசாங்கம் பற்றிய உங்களின் இன்றைய மதிப்பீடு என்ன?

'பதில்: இந்திய அரசாங்கம் [ எமது பயணத்துக்கு அனுதாபம் காட்டுகின்றது நாம்] இங்கு இருக்க அனுமதிக்கப்பட்டு உள்ளமை கூட இந்திய அரசாங்கத்தின் பெருந்தன்மையை காட்டுகின்றது: நாடு கடந்து வாழும் எமது சகல அரசியல் தலைவர்களும் இந்தியா பெருமனதுடன் அடைக்கலம் அளித்துள்ளது.

'கேள்வி: இந்திய அரசாங்கத்தின் மத்தியஸ்தம் சம்பந்தமாக உங்களின் நிலைப்பாடு என்ன?

'பதில்: இந்திய அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை நாம் பூரணமாக ஆதரிக்கின்றோம்; நாம் இந்தியாவின் பாத்திரத்தை பூரணமாக ஆதரிக்கின்றோம்.

'கேள்வி: ஆனால் இந்தியா, ஒரு ஐக்கிய இலங்கை என்ற கட்டுக் கோப்பினுள் தீர்வினை தேடுகின்றது நீங்களோ ஈழத்தினைச் சார்ந்துள்ளீர்கள் அது நீங்கள் இந்தியாவுடன் முரண்படுவதைக் காட்டவில்லையா?

'பதில்: நாம் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை பிரதி நிதித்துவம் செய்கின்றோம். இந்திய அரசாங்கம் எமது மக்களின் அபிலாசைகளுக்கு எதிராகச் செல்லும் என

(7 ம் பக்கம் பார்க்கவும்)

புரட்சிக் கம்யூனிஸ்ட்
கழகத்தில் சேருங்கள்!

பெயர் :..................................................

முகவரி :..................................................

கழகத்தைப்பற்றி எனக்கு மேலும் விபரங்கள் வேண்டும்
நிரப்பிய இப்பத்திரத்தை
அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர் :

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

90, 1-வது மாவிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு 10;

படிப்பகம்

www.padippakam.com



# எம் - பண்டா முதலாளித்துவ . . .

[6ம் பக்கத் தொடர்ச்சி]

நாம் எண்ணவில்லை. எமக்கு இந்தியாவின் ஆதரவு முக்கியம். ஆனால் எமக்கு சுயநிர்ணய உரிமை உண்டு;

'கேள்வி: ராஜீவ் பயங்கரவாதத்திற்கு கருணை காட்டாதுதால் அவர் உங்களை வெளியேறும்படி கூறினால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

'பதில்: ராஜீவ் எங்களை மூட்டை முடிச்சுகளை கட்டும் படி கோருவார் என நாம் எண்ணவில்லை. ஆனால் அவ்வாறு நாம் கேட்கப்பட்டால் நாம் போக வேண்டி இருக்கும். எமது தாயகம் எமக்கு எப்போதும் கை நீட்டிய படி உள்ளது. ஆனால் அவர் தமிழ் மக்கள் மீது முழு அனுதாபம் கொண்டுள்ளார் என நம்புகின்றோம்''.

சம்பவம் நடந்ததன் பின்னர் புத்திசாலியாகக் காட்டிக் கொள்ளும் அரைகுறை முயற்சிகளை விடுத்து பண்டா அத்தகைய மனப்போக்கினால் தமிழ் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் ஏழைகளுக்கும் ஏற்படும் ஆபத்தை இட்டு செய்த எச்சரிக்கை பற்றிய தனது 'ரெக் கோட்டை' காட்ட முடியுமா? அவரால் முடியாது. ஏனெனில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு தேசிய போராட்டமாகவே போராடி வர வேண்டும் என்ற பெரும் வக்கீல்களில் அவரும் ஒருவர்.

## சாதுரியம்

இன்றைய சகாப்தத்தில் இதற்கு ஓர் அர்த்தம் மட்டுமே உண்டு: நானாவிதமான முதலாளித்துவ அரசுகளுக்கு இடையே சாதுரியங்களின் ஊடாக இலக்குகளை அடைய முடியும். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் எவ்வளவு தான் வீரம் மிக்கதாக இருந்த போதிலும், துன்பகரமான விதத்தில் இந்த ..ங்குரோத்துக் கொள்கைக்கு அடிபணியச் செய்யப்பட்டு உள்ளது.

இப்போக்கினை பற்றி பு. க. க. எச்சரிக்கை செய்த வேளையில் பண்டா ந/ன்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அரசியல் ஆளுமையை தவறாகப் பாவித்து பு. க. க. வை அமைப்பு ரீதியில் சிதறடிக்க முயன்றார். அத்தோடு தேசிய விடுதலை இயக்கத் தலைமையைக் கண்டனம் செய்த பு. க. க. வின் கட்டுரைகளை 'நியூஸ் லைனில்' தணிக்கை செய்ததற்கும் இவரே பொறுப்பாளி.
(பார்க்க 'நான்காம் அகிலம்' மார்ச் 1987 பக்கம் — 62 — 63)

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்குக் குந்தகமாக இந்திய முதலாளி வர்க்கம் தலையிடாது என்ற பிரபாகரனின் நம்பிக்கைக்கு மத்தியில் இந்திய அரசாங்கம் இலங்கை யூ. என். பி. அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒரு உடன்படிக்கையின் பின்னர் விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகள் ஆக்குவதில் நேரடியாக ஈடுபட்டது. பிரபாகரன் கைது செய்யப்பட்டு, இந்திய விமானப் படை விமானத்தில் குடா நாட்டில் இருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டார். விடுதலைப் புலிகளை சுயேச்சையாக நிராயுதபாணியாக்க நெருக்கவே இது இடம் பெற்றது.

இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையே ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட சமயத்தில் பிரபாகரனின் ஆரம்ப பிரதிபலிப்புக்கள், இதனை இந்திய அரசாங்கத்தின் காட்டிக் கொடுப்பு என கண்டனம் செய்தன. இருந்த போதிலும் இந்திய முதலாளி வர்க்கத்துக்கு இந்த எதிர்ப்பினை அபிவிருத்தி செய்வதற்கான எந்த ஒரு அரசியல் சாதனங்களையும் அவர் கண்டு பிடிக்கவில்லை. ஏனெனில், அவர் ஒரு போதும் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் பாத்திரத்தை ஏற்றது கிடையாது. எனவே விடுதலைப் புலிகளின் விட்டுக் கொடுப்பு தவிர்க்க முடியாதது ஆகியது. ஆகஸ்ட் 4 ம் திகதி யாழ்ப்பாணத்தில் தமது ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில் பிரபாகரன் சரணடைய உத்தரவிட்டார்:

''... எமது மக்களை கலந்தாலோசிக்காமலும் எமது கருத்துக்களை அறியாமலும் செய்யப்பட்ட இந்த உடன்படிக்கையின் முடிவினை நாம் பலமாக எதிர்க்கிறோம் எவ்வாறு எனினும் இதை நாம் எதிர்ப்பதில் எது வித அர்த்தமும் இல்லை. ஒரு மாபெரும் சகதி, எமது அரசியல் தலைவிதியை எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விதத்தில் நிர்ணயம் செய்ய தீர்மானித்ததன் பின் நாம் என்ன செய்வது?

''இந்த உடன்படிக்கை எமது இயக்கம், எமது அரசியல் இலக்குகள், நோக்கங்களை நேரடியாகப் பாதிக்கின்றது. இது எமது போராட்டத்தின் வடிவத்தையும் உருவத்தையும் பாதிக்கின்றது. இது எமது ஆயுதப் போராட்டத்துக்கும் கூட ஒரு முற்றுப் புள்ளி வைக்கின்றது. 15 வருடங்களாக இரத்தம் சிந்தி, தியாகங்கள் ஊடாக, பல பெரும் உயிர்த் தியாகங்கள் மூலம் இந்தக் கட்டத்துக்கு எமது போராட்டத்தைக் கொணர்ந்து ஒரு சில நாட்களுள் கலைக்கவோ அல்லது தடை விதிக்கவோ அல்ல. இதை எம்மால் ஜீரணிக்க முடியாது உள்ளது.

''இந்த ஒப்பந்தம் எமக்கு காலக்கெடு வழங்காது எமது போராளிகளின் உடன்பாட்டைப் பெறாது, எமது மக்களின் பாதுகாப்புக்கு ஒரு உத்தரவாதமும் அளிக்காது எம்மை திடீர் என நிராயுதபாணிகள் ஆக்குகின்றது. ஆதலால் நாம் ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்தோம்;

''அத்தகைய நிலைமைகளின் கீழ் இந்தியாவின் மதிப்புக்குரிய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, என்னை ஓர் கலந்துரையாடலுக்கு அழைத்தார். நான் எனது உள்ளத்தை திறந்து எமது பிரச்சினைகளையும் சந்தேகங்களையும் அவரிடம் பேசினேன். இந்த உடன்படிக்கையின் அமுலினை பூர்த்தி செய்யப் போவதாகக் கூறியதை நான் நம்பவில்லை என இந்திய பிரதமரிடம் சுட்டிக் காட்டினேன்.

''எமது மக்களின் பாதுகாப்புப் பற்றி அவருடன் பேசியதோடு அதற்கு உத்தரவாதமும் கேட்டேன். இந்தியப் பிரதமர் எனக்கு சில உத்தரவாதங்களை வழங்கினார் எமது மக்களின் பாதுகாப்புக்கு அவர் ஒரு உத்தரவாதம் தந்தார். இந்தியப் பிரதமரின் நேர்மையில் எனக்கு நம்பிக்கை உண்டு அவரின் உத்தரவாதத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு.

இனவாத இலங்கை அரசினை திரும்பவும் தமிழ் மக்களுக்கு எதிரான இனப் படுகொலை பாதையில் செல்ல அனுமதிக்காது என்று நாம் நம்புகின்றோம். இந்த நம்பிக்கையினாலேயே நாம் எமது ஆயுதங்களை இந்திய அமைதி காக்கும் படையிடம் ஒப்படைக்க முடிவு செய்தோம்.

''ஈழம் தமிழர்களின் ஒரே காப்பீடான — எமது ஆயுதங்களை எம்மிடமிருந்து எடுத்து கொண்டதன் மூலம் இந்திய அரசாங்கம் எமது மக்களைக் காக்கும் பாரிய பொறுப்பினை எடுத்துக் கொள்கின்றது; ஆயுதக் கையளிப்பு இந்த பொறுப்பு மாற்றத்தையே குறித்து நிற்கிறது.

''நாம் எமது ஆயுதங்களை கையளிக்கா விட்டால் இந்திய இராணுவத்துடன் மோதிக் கொள்ளும் விபரீதமான சூழ்நிலைக்குள் தள்ளப் படுவோம். நாம் இதை விரும்பவில்லை. நாம் இந்திய மக்களை நேசிக்கின்றோம். இந்திய படை வீரர்களுக்கு எதிராக எமது ஆயுதங்களை பாவிக்கும் பிரச்சினைக்கே இடமில்லை. இந்திய இராணுவம் எமது எதிரியிடம் இருந்து எம்மைப் பேணிக் காக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்கின்றது.

அதனிடம் எமது ஆயுதங்களை ஒப்படைத்ததன் காரணமாக இந்திய அரசாங்கம் ஈழத் தமிழர்கள் எவ்வொருவரதும் உயிருக்கும் பாதுகாப்புக்கும் பூரண பொறுப்பு ஏற்க வேண்டும் என நான் அழுத்தம் திருத்தமாக கூறி வைக்க விரும்புகின்றேன்.

''இந்த இந்திய முயற்சியில் ஒத்துழைப்பதை விட எமக்கு வேறு வழி இல்லை எவ்வாறு எனினும் இந்த உடன்படிக்கையின் பெறுபேறாக தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிட்டும் என நான் நினைக்கவில்லை. இந்த உடன்படிக்கையை சிங்கள இனவாத பசாசு சிதறடிக்கும் நாள் அதிக தூரத்தில் இல்லை. தமிழ் ஈழ மக்களின் பிரச்சினைக்கு தமிழ் ஈழ தனிய ரசினால் மட்டுமே ஒரு நிரந்தர தீர்வினை வழங்க முடியும் என்பதில் நான் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளேன்.

''தமிழ் ஈழ மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகத்தில் பங்கு கொள்ளும் அல்லது தேர்தலில் போட்டியிடும் சூழ்நிலைகள் உருவாகலாம். ஆனால் எந்தவொரு சூழ்நிலையிலும் நான தேர்தலில் போட்டியிடவோ அல்லது தலைமை அமைச்சர் பதவியை ஏற்கவோ போவதில்லை. என்பதை திடமாகப் பிரகடனம் செய்கின்றேன்''.
('ஹிந்து' (ஆகஸ்ட் 8, 1987) பத்திரிகையில் பிரசுரமான பிரபாகரனின் பேச்சின் தமிழாக்கம்)

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரின் பேச்சு குட்டி முதலாளித்துவ தேசியவாதம் நுழைந்து கொண்டு உள்ள அரசியல் குருட்டுச் சந்தினை வெளிப்படுத்தி உள்ளது. பிரபாகரன் இந்திய முதலாளி வர்க்கம் தமிழ் தாயகத்தை ஆக்கிரமித்து, தேசிய விடுதலை இராணுவத்தை நிராயுதபாணியாக்கியமைக்காக ஒரு அரசியல் நற்சான்றிதழ் இனவாத கலகங்களின் பரம்பல் மூலம் தமிழ் சுதந்திரம் கிட்டும் என்ற நம்பிக்கையும் கொண்டார்.

அவர் இலங்கை, இந்திய தொழிலாளர்களை தமிழ் வெகுஜனங்களின் பாதுகாப்புக்கு வரும் படி அழைப்பு விடுத்தார் இல்லை. ஆனால் இந்தியாவுக்கு உள்ளேயே பல ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கு மதச் சிறுபான்மையினருக்கும் எதிராக இனவாத இனவெறி ஆத்திர மூட்டல்களுக்கு பேர் போன இந்திய இராணுவத்தின் கால்களில் இன்று தமது பாதுகாபபு இருக்க வேண்டும் என உறுதியாக 'விரும்பினார்.'

— தொடரும் —

## சர்வதேச . .

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

க்கையாக, ஜனநாயக கட்சியில் இருந்து பிரிந்து தொழிலாளர் கட்சியை தொழிற் சங்கங்கள், சோசலிச திட்டங்களால் ஆயுத பாணியாக்கலை அடிப்படையாக கொண்டு கட்டி எழுப்ப வேண்டும்.

இதற்கு, அமெரிக்க ஆளும் வாக்கத்தின் நிரந்தர ஏஜந்துகளாக, தொழிலாள வர்க்கத்தை உள்ளூரின் ஒவ்வொரு போராட்டத்திலும் அடக்கி விட சேவை ஆற்றி வரும் உலக ரீதியில் தமது வர்க்க சகாபடி சகோதரர்கள் உடன் ஒன்றிணைய விடாது அமெரிக்க தொழிலாள வர்க்கத்தை பாதுகாப்பு வாதமான நச்சு வெளிபேரினவாத நஞ்சினை பரப்பி ஆழ்த்தி வைக்க சேவையாற்றும் பிற்போக்கு தொழிற் சங்க அதிகாரத்துவம் பிரதான தடையாக விளங்குகின்றது.

இப்புரட்சிகர திட்டங்களுக்கான போராட்டமானது தொழிலாள வர்க்கத்தினுள் புதிய புரட்சிகர தலைமையை கட்டி எழுப்புவதில் காணப்படுகின்றது. இந்த திட்டத்தில் இணங்கும் சகல தொழிலாளர் இளைஞர்களை தொழிலாளர் கழகத்தில் சேர்ந்து அத்தகைய தலைமைத்துவத்தை கட்டி எழுப்ப போராட இணையுமாறு நாம் கோருகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



24

# இந்திய இராணுவ தாக்குதல்...

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

னர் தேசிய சிறப்பு உரிமை பொறியில் இருந்து விடுபட்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும், (இந்திய) சோசலிச லேபர் லீக்கினையும் கட்டி எழுப்புவது அவசியம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளடங்களான ஏனைய குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளும் இலங்கையின் சகல வகையருக்களைச் சேர்ந்த மத்தியவாதிகளும் இந்திய முதலாளி வர்ககத்துக்கு 'ஜனநாயக' முகமூடி வழங்கிய கடந்த ஜுலை 'விமான உதவி' சமயத்தில் இந்திய சோசலிச லேபர் லீக்கின் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் சரியான விதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டனர்:

''தமிழ் ஈழம் மக்களின் தேசிய விடுதலைக்கு உதவுகையில் இந்தியத் தொழிலாள வர்க்கம் முக்கிய பாத்திரம் வகிக்க வேண்டி உள்ளது: இலங்கை இந்திய முதலாளித்துவ அரசுகள் இரண்டினதும் மிக முக்கிய பாதுகாப்பாளனான இந்திய ஆளும் வர்க்கத்தினை அம்பலப்படுத்தி தோற்கடிப்பதே அப்பணியாகும். இந்தியாவினுள் முதலாளிகள் ஆட்சி செலுத்தும் வரை, அவர்கள் ஈழம் தேசிய இனத்தினரின் தேசிய விடுதலை இயக்கத்தை ஒழித்துக் கட்ட தம்மால் ஆனதை எல்லாம் செய்கின்றனர் மோசடி 'உதவிகளின்' பின்னணியில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை முடக்கி, இலங்கை முதலாளிகளின் கையில் ஒப்படைக்கும் கடைகெட்ட திட்டம் இருந்து வருகின்றது.'' ('புலட்டின்' — 21 ஜுலை 1987)

இந்த ஆய்வு, இன்று முழுமனே நிருபனமாகி உள்ளது. அது மட்டும் அன்றி அன்று விடுதலைப் புலிகள் உள்ளடங்களான தமிழ் குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளாலும் மத்தியவாதிகளாலும் ஸ்டாலினிஸ்டுகளாலும் தவறான வழியில் திசை திருப்பப்பட்டு ராஜீவ் காந்தி ஆட்சிக்கு பக்கபலமாக அணி திரட்டப்பட்ட வெகுஜனங்கள் இன்று எதிரிடையான திசையில் பயணத்தை ஆரம்பித்து உள்ளார்கள். இதனை ஸ்டாலினிஸ்டுகளாலோ அல்லது தி. மு. க., அ. தி. மு. க. இனவாதிகளாலோ நிறுத்தி விட முடியாது.

தமிழ் நாட்டில் மட்டும் அன்றி தென் இந்தியாவில் தொழிலாள வர்க்கம், ஏழைகள் இடையே புதுடில்லி ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராக கடும் எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வருகின்றது. இதனை பலவீனம் அடையச் செய்ய தி. மு. க தலைவர்களும் ஸ்டாலினிஸ்டுகளும் கையாலாகத்தனமான நடவடிக்கைகளில் இறங்கி உள்ளனர். 'இராணுவ தாக்குதலை நிறுத்து!' என்ற கோஷத்தின் கீழ் அக்டோபர் 16 ல் தி. மு. க. — அ. தி. மு. க. தலைவர்கள் ஏற்பாடு செய்து உள்ள உத்தேச 6 மணித்தியால அடையாள வேலை நிறுத்த மோசடியால் இந்திய தொழிலாளர்களை ஏமாற்ற முடியாது.

காந்தி அரசாங்கத்துக்கு எதிராக தொழிலாள வர்க்கம் நடாத்தி வரும் போராட்டத்துக்கு மத்தியில் தொழிலாள வர்க்கத்தின் வர்க்க சுயாதீனத்தினை நிலை நாட்டுவதுடன் தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கத்தினை அமைக்கும் நடவடிக்கைகளை இந்திய ட்ரொட்ஸ்கிஸ்டுகள் ஏற்கனவே மேற் கொண்டுள்ளனர். அவர்கள் முதலாளி வர்க்க கட்சிகளிலிருந்து பிரியும் மாறும், தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்துக்குப் போராடும் மாறும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் நெருக்கி, அவர்களின் வேசத்தைக் கழைந்து எறிய தொழிலாள வர்க்கத்தை அணி திரட்ட ஆரம்பித்து உள்ளது. தமிழர் வசிப்பிடங்களிலிருந்து இந்திய ஆக்கிரமிப்பு படைகளை அகற்றும் படி இந்திய ட்ரொட்ஸ்கிஸ்டுகள் போராடுகின்றனர்.

யாழ்ப்பாணக் குடா நாட்டினுள் இந்திய, இலங்கை விமானப் படையினர் ஒன்றிணைந்து விமானத் தாக்குதல் நடாத்துவதோடு கிழக்கு மாகாணத்தில் யூ. என். பி. அரசாங்கம் 'உடன்படிக்கை' எனப்படுவதை சுக்குநூறாக்கி விட்டு ஊர்க்காவல் படைகளை ஆயுதபாணிகளாக்கி, புதிய பாதுகாப்பு அரண்களையும் அமைத்து வருகின்றது.

இந்திய இராணுவம் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் வரை காத்திருப்பது யூ. என். பி. அரசாங்கம் பட்டும் அன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முதலாளிகளும், இந்திய இராணுவத்துக்குப் பொய் எதிர்ப்புக் காட்டும் அதே சமயம் அவர்கள் தமிழ் மக்களை ஒடுக்கும் வரை பார்த்து இருக்கின்றனர் அது மட்டும் அன்றி இந்திய இராணுவத்துக்கு எதிராக தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் நடாத்தி வரும் வீரம் மிக்க எதிர்த்தாக்குதல் சிங்கள தொழிலாளர் விவசாயிகளிக்கு ஊக்குவிப்பாக அமையும் என அஞ்சி, சிங்கள — தமிழ் மக்களை பிளவுபடுத்தும் கையாலாகாத்தனமான பிரச்சாரத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஈடுபட்டுள்ளது.

வடக்கு — கிழக்கு மாகாணங்களில் இன்றைய நிலைமை சுதந்திரக் கட்சிக்கு மட்டும் அன்றி படுகேவலமான இனவாத பிற்போக்கு மக்கள் விடுதலை முன்னணியினதும் அதனது 'தேசபக்த மக்கள் இயக்கத்தினதும்' ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ தன்மையை அம்பலம் ஆக்கி உள்ளது. இந்திய இராணுவத்திற்கு எதிராக 'போராட்டத்துக்கு செல்லுங்கள்' என சிங்கள படைகளை கோரி சுலோகங்கள் எழுதி வந்த இவர்கள் இன்று உண்மையில் இந்திய இராணுவத்துக்கு எதிராக வடக்கு — கிழக்கில் தாக்குதல் இடம் பெற்று வரும் வேளையில் என்ன செய்கிறார்கள்? தமிழர் விரோத பிரச்சாரத்தை நடாத்தி வருகின்றார்கள். மக்கள் விடுதலை முன்னணியின் 'தாயகம்', 'தேசம்' என்ற கதையளப்புக்களின் பிற்போக்குத்தனம் இவற்றினால் அம்பலமாகின்றது. சமசமாஜ — கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் யூ, என். பி. ஏவல் நாய்களாக மாறி தொழிலாள வர்க்கத்தினை சாட்டிக் கொடுத்து வருவதால் தவறான வழியில் சென்ற மத்தியதர வர்க்கத்தின் ஒரு பிரிவினர், மக்கள் விடுதலை முன்னணியில் சேர்ந்து கொண்டுள்ளனர். இம்முன்னணி தாயகத்தையோ அல்லது தேசத்தையோ விடுதலை செய்வதற்கு அன்றி, சிங்கள முதலாளிகள் வடக்கு — கிழக்கு மாகாணங்களினை திரும்பவும் கைப்பற்றும் ஆக்கிரமிப்பு இனவாத யுத்தத்தின் கைப்பொம்மைகளாகி உள்ளனர்: இவர்கள் சிங்கள இனவாத இராணுவ சர்வாதிகாரத்தினை தொழிலாள வர்க்கத்திற்கு எதிராகத் தயார் செய்யும் வேட்டை நாய்க் கூட்டமாக இயங்கி வருகின்றார்கள்.

தமிழ் தேசிய இனத்தின் இரத்தத்தினால் கைகழுவ யூ. என். பி — காங்கிரஸ் முதலாளிகளுடன் கைகோர்த்து நிற்கும் சமசமாஜ — கம்யூனிச — இ. தொ. கா. தலைவர்கள், தமிழ் தேசிய இனத்தின் தொழிலாள வர்க்க பாதையின் கீழ் அணி திரட்டி, முதலாளித்துவ அமைப்பினை தூக்கி வீசும் பாதையில் குதிப்பதைத் தடை செய்யும் எதிர்ப்புரட்சிக் கும்பலாகும்.

இந்திய — இலங்கை முதலாளிகள், இந்த தலைவர்கள் முதலாளி வர்க்கத்துக்கு வழங்கி உள்ள ஒத்துழைப்பை பயன்படுத்தி, தமிழ் — சிங்கள மக்களை மோத வைப்பதன் மூலம் பெரும் இரத்தக் களரியைச் சிருஷ்டிக்கின்றார்கள். இந்திய — இலங்கை உடன்படிக்கை, 'ஜனநாயகத்தை' உறுதி செய்வதாக இவர்கள் கூறிக் கொண்டனர். என்ன ஏமாற்று! இந்த உடன்படிக்கையின் ஒரே அர்த்தம், ஜனநாயகத்தை கேட்டு நின்ற பிரமாண்டமான ஒடுக்கப்படும் மக்களை இரத்த வெள்ளத்தில் ஆழ்த்துவதே.

இலங்கை — இந்திய ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும் சமசமாஜக் கட்சியின் தலைவர்களும் இந்த உடன்படிக்கையை முழுமனே அமுல் செய்ய வேண்டும் எனக் குரல் கொடுக்கும் போது — அவர்கள் ஏகாதிபத்திய ஏஜன்டுகளின் குரலிலேயே பேசுகின்றனர்: இவர்கள் இங்ஙனம் குரல் கொடுத்து வந்த சமயத்தில் — அக்டோபர் 10 ல் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் ஆசிய பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி சார்ளஸ் ரெட்மான் 'இந்திய — இலங்கை உடன்படிக்கையை முழுமனே அமுல் செய்யும் படி' காந்தி — ஜயவர்தன அரசாங்கங்களைக் கேட்டுக் கொண்டதாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுதாபனமும், ஸ்டாலினிச 'அத்த' பத்திரிகையும் குறிப்பிட்டன.

சமசமாஜ — கம்யூனிச — இ. தொ. கா. தலைவர்கள் இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு வழங்கும் பிற்போக்கு உதவியை உடைத்தெறியத் தொழிலாள வர்க்கம் தலையிட வேண்டுமென நாம் வேண்டுகின்றோம். தமிழ் தேசிய இனத்தினை ஒடுக்கவும், தொழிலாள வர்க்கத்துக்கு எதிராகவும் தயாராகி வரும் இந்திய இலங்கை முதலாளித்துவ கூட்டுக்கும், இலங்கையினுள் யூ. என். பி. சிறீலங்கா சுதந்திரக் கட்சி பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராகவும் இத்தகைய தலையீட்டின் மூலமே அரசியல் போராட்டத்தினை ஆரம்பிக்க முடியும்.

இந்திய இலங்கை ஆக்கிரமிப்பு படைகளை உடனடியாக வடக்கு கிழக்கிலிருந்து அகற்றவும், தமிழ் தேசிய இனத்தின் தேசிய உரிமைகளை உத்தரவாதம் செய்யவும் முன் நிற்பதன் மூலம் சிங்கள தமிழ் பேசும் மக்களின் சோசலிசக் குடியரசினை நிறுவும் முன்நோக்கின் அடிப்படையில் யூ. என் பி. அரசாங்கத்தினை வெளியேற்றவும் தொழிலாளர் ,விவசாயிகள் அரசாங்கத்தினை அமைக்கவும் தொழிலாள வர்க்கத்தை முதலாளித்துவ கட்சிகளிலிருந்து சுயாதீனமாக்கவும் போராடுவதே. இன்று ஒரே வழி

இப்போராட்டத்தில் சமசமாஜ, கம்யூனிச, இ. தொ. கா. துரோகிகளதும், அவர்களது சகபாடிகளான நவசமசமாஜ மத்தியவாதிகளையும் ஏனைய இடதுசாரி மத்தியவாதிகளையும் தொழிலாள வர்க்கத்தினுள் அரசியல் ரீதியில் தோற்கடித்து புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்ப போராட வேண்டும். விடுதலைப் புலிகளின் தலைமையின் வங்குரோத்து அரசியல் நடை முறைகளுக்கும், சமசமாஜ, கம்யூனிச, இ. தொகா— தலைமைகளின் துரோகங்களுக்கு எதிராகவும் தமிழ் தேசிய பிரச்சினையை தீர்க்கவும், இந்திய, இலங்கை முதலாளி வர்க்கங்களின் எதிர்ப்புரட்சிக் கூட்டுக்கு எதிராகவும் போராடும் சுயாதீனமான தொழிலாள வர்க்க வேலைத்திட்டத்தினை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கைக் குழுவான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமுமே முன்வைத்து உள்ளன புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணைந்து அதனை தொழிலாள வர்க்கத்தின் புரட்சித் தலைமையாகக் கட்டி எழுப்பும் படி சகல முன்னேற்றமான தொழிலாளர்களையும் வேண்டுகின்றோம்.

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு -10, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி 53 ம் இலக்கத்தில் உள்ள பிரஜாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed in Germany
Neue Arbeiterpresse, Alfredstr. 71, D – 4300 Essen 1, West-Germany

படிப்பகம்